# கடலூரில் - கருணையே உருவான முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்று, சாலைகளின் இருமருங்கிலும் கரையுடைத்த வெள்ளமென மக்கள் திரண்டிருந்த கண்கொள்ளாக் காட்சிகள்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) கடலூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தபோது, பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பு.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) கடலூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக செல்லும் வழியில், பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, சிறுவர்களுடன் செல்ஃபி எடுத்துக்கொண்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) கடலூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக செல்லும் வழியில், பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, மாணவிகளிடம் உரையாடினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) கடலூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தபோது, பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பு.

### கடலூர் மேற்கு – நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் – பா.ம.க. – அ.தி.மு.க. – பா.ஜ.க. – த.வெ.க. –

# தே.மு.தி.க. - அ.ம.மு.க. - நாம் தமிழர் கட்சிகளிலிருந்து 6000 பேர் விலகி கழகத்தில் இணைந்தனர்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!





கடலூர், பிப்.23–

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலியில் நெய்வேலி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சபா. இராஜேந்திரன் ஏற்பாட்டில் பா.ம.க. – அ.தி.மு.க. – பா.ஜ.க. – த.வெ.க. – தே.மு.தி.க. – அ.ம.மு.க. – நாம் தமிழர் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 6000க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (21-02-2025) மாலை, நெய்வேலி நகரம், சிபிஎஸ் அண்ணா திடலில், கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சபா.இராஜேந்திரன் ஏற்பாட்டில் பா.ம.க. - அ.தி.மு.க. - பா.ஜ.க. - த.வெ.க. - தே.மு.தி.க. - அ.ம.மு.க. - நாம் தமிழர் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 6000க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் - உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.கழகத்தில் இணைந்தவர்கள் விவரம்:-

பா.ம.க.வைச் சேர்ந்த மாவட்ட துணைச் செயலாளர் செம்மேடு அருள்ஜோதி, பசுமை தாயகத்தைச் சேர்ந்த மாவட்ட செயலாளர் காட்டாண்டிகுப்பம் செந்தில்முருகன், மாவட்ட தலைவர் இந்திராநகர் சிவதானம், கணேசன், மருத்துவ அணியைச் சேர்ந்த நடுக்குப்பம் பாப்பன்கொல்லை டாக்டர் செந்தில்குமார், ஒருங்கிணைப்பாளர் செங்கடாம் பேட்டை சீனிவாசன், செடுத்தான்குப்பம் பாலமுருகன், பாரதி, பாரதி நகர் சதீஷ், நெய்வேலி பிரகாஷ், சிறுவத்தூர் அருண், திருவாமூர் பார்த்தசாரதி, அழகப்பசமுத்திரம் வீரமணி, முத்தாண்டிகுப்பம் சுதாகர், காங்கேயன்குப்பம் கலியபெருமாள், வீரசிங்கன்குப்பம் எலவத்தடி ராஜேந்திரன், சிறுதொண்ட மாதேவி சிவக்குமார், வசந்தகுமார், பாவைக்குளம் ராஜேஷ்குமார், மருங்கூர்தோப்பு கொல்லை வரதன், முத்தரசன்குப்பம் மணிமேட்டுக்குப்பம் புதுப்பாளை யம் விவேக், கீழூர் கோவில்குப்பம் தமிழ் - தேமுதிக ஒன்றிய பொருளாளர் மேலிருப்பு அன்பழகன், காட்டுக்கூடலூர் மணிமோழி, நடுக்காட்டுபாளையம் சிலம்பரசன், கீழ்மாம்பட்டு பாலாஜி - பாஜகவைச் சேர்ந்த மாவட்ட துணைத் தலைவர் சமட்டிக்குப்பம் த.சுப்பிரமணி, மாவட்ட இளைஞர் அணித் தலைவர் அப்பியம்பேட்டை ஆனந்தராஜ், ஓபிசி அணி மாவட்ட பொருளாளர் காடாம்புலியூர் கார்த்திகேயன், மாளிகம்பட்டு ஆண்டிக்குப்பம் சரவணன், காட்டுப்பாளையம் சத்தியமூர்த்தி - அ.தி.மு.க.வைச் சேர்ந்த புறங்கணி சதீஷ், மேல்மாம்பட்டு கருணாநிதி, ஏரிப்பாளையம் பார்த்தசாரதி, மோகன், வடக்குத்து செந்தாமரைக்கண்ணன், பெருமாத்தூர் பாலாஜி, அன்னதானம்பேட்டை விஜய், ராகுல், கானஞ்சாவடி வேலு, பத்திரக்கோட்டை தெய்வமூர்த்தி, கிளைச் செயலாளர்கள் கருக்கை உக்கரமூர்த்தி, சங்கர், செரத்தங்கழி பாலகிருஷ்ணன், சந்தைவெளிப்பேட்டை அழகேசன், நெய்வேலி மணிகண்டன், அழகப்பசமுத்திரம் டி.சுந்தரம் - அமமுக ஒன்றியச் செயலாளர் சிலம்பிநாதன் பேட்டை கலைச்செல்வன் - நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த நெய்வேலி ஈஸ்டர் - தமிழக வெற்றிக் கழகம் கட்சியைச் சேர்ந்த நெய்வேலி மணிவாசகம், காடாம்புலியூர் சந்தோஷ்குமார், உள்ளிட்ட 6000க்கும் மேற்பட்ட பா.ம.க. - அ.தி.மு.க. - பா.ஜ.க. - த.வெ.க. - தே.மு.தி.க. - அ.ம.மு.க. - நாம் தமிழர் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் - உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி, கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன், நெய்வேலி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.